## தொழில்கள் பற்றி பெற்றோரும் பிள்ளைகளும் அறிய உதவும் அமைச்சின் புதிய உதவித்திட்டம்

# நிபுணர்கள் கட்டமைப்பு

தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், பெற்றோருடன் செயல்பட நிபுணர்கள் கட்டமைப்பு ஒன்றைக் கல்வி அமைச்சு உருவாக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் ஹெங் சுவீ கியட் நேற்று அறிவித்தார்.

நீ ஆன் பலதுறைத்தொழிற் கல்லூரியில் நேற்று நடைபெற்ற அமைச்சின் ஆண்டு செயல் திட்டக் கருத்தரங்கில் பேசிய அமைச்சர் அது குறித்த விவரங்களை வெளியிட்டார்.

இந்தக் கட்டமைப்பில் இடம்பெறும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் மாறுபட்ட தொழில்களை அடையாளம் கண்டு, அவற்றின் சிறப்புகளை உணர்ந்து கொள்ளவும் பல பாதைகளைத் தெரிந்துகொள்ளவும் மாணவர்களுக்கு உதவுவார்கள்.

முதல் கட்டமாக இந்தக் கட்டமைப்பில், வர்த்தகம், மனிதவியல், விளையாட்டு போன்ற ஏழு துறைகளைச் சேர்ந்த 17 பங்காளிகளும் 16 தனி மனிதர்களும் ‘ஏ’ஸ்டார்’ நிறுவனமும் இடம்பெறும் என்று அமைச்சர் கூறினார்.

‘ஹோம்ஃபிக்ஸ் டிஐஒய்’ கடைத்தொகுதியின் நிர்வாக இயக்குநர் லோ சியோங் கீ, ‘யேல் என்யுஎஸ்’ கல்லூரியின் கல்வி விவகாரங்களுக்கான நிர்வாகத் துணைத் தலைவர் பேராசிரியர் டான் டாய் யோங், திரைப்படத் தயாரிப்பாளர் ராய்ஸ்டன் டான் ஆகியோர் அந்த 17 பங்காளிகளில் சிலர்.

இவர்கள் பெற்றோர், மாணவர்களுக்கான உரை நிகழ்ச்சிகள், பயிலரங்குகள், வேலைப் பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றை நடத்துவர். இத்திட்டம் வழி அடுத்த ஆண்டு இறுதிக்குள் கிட்டத்தட்ட மாணவர்களுக்கு வாழ்க்கைத் தொழிலில் வழி காட்டக்கூடிய 300 பேரை பள்ளிகளுடன் இணைக்க அமைச்சு திட்டமிட்டுள்ளது. 1,000 பங்காளிகளைக் கொண்ட கட்டமைப்பை உருவாக்க அமைச்சு விழைகிறது.

தொழில்துறை பங்காளித்துவத்துடன் பெற்றொர்களுடனான பங்காளித்துவத்தையும் அமைச்சு மேம்படுத்தி வருகிறது.

மேலும் கல்வி, தொழில் வழி காட்டிக் கையேடு ஒன்றையும் தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பெறுவர்.

அடுத்த மாதம் விநியோகிக்கப்படவுள்ள இந்தக் கையேடு, பிள்ளைகளுக்கு வழிகாட்ட பெற்றோருக்கு உதவும். பிள்ளைகள் தங்களது ஆர்வத்தையும் விருப்பத்தையும் அடையாளம் காணவும் எதிர்கால வேலை உலகம் பற்றித் தெரிந்துகொள்ளவும் பெற்றோர் வழிகாட்டலாம்.

அத்துடன் அடுத்த ஆண்டு தொடக்கநிலை 1க்குச் செல்லும் அனைத்துப் பிள்ளைகளின் பெற்றோரும் நவம்பர் மாதத்தில் நடவடிக்கைப் புத்தகம் ஒன்றைப் பெறுவர். தொடக்கப்பள்ளி வாழ்க்கைக்குப் பிள்ளைகளைத் தயார்படுத்த இந்தப் புத்தகம் வழிகாட்டும்.

பிள்ளைகள் தொடக்கப்பள்ளி வாழ்க்கையைப் பழகிக்கொள்ளும் வகையில் பெற்றோர்–பிள்ளைகள் இடையிலான உரையாடலை ஊக்குவிக்க நூலில் உள்ள குறிப்புகளும் நடவடிக்கைகளும் உதவும்.



அமைச்சின் பெற்றோர்–
பிள்ளைகள் நடவடிக்கை புத்தகம்
**படம்: கல்வி அமைச்சு**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.